

எமது மக்களுக்கு
இப்போது தேவை

# சமாதானமும் அமைதியுமே!

மத்திய குழு சார்பாக
செயலாளர் நாயகம்
தோழர்
**க. பத்மநாபா**

★ EPRLF ★

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

முதற்பதிப்பு : 9 ஆகஸ்டு, 87
இரண்டாம் பதிப்பு : 1 செப்டம்பர் 87

---

அன்பிற்கினிய தோழர்களே!

கடந்த நீண்டகால இடைவெளியில் தொடர்பு கொள்ள முடியாமற் போனமைக்கு போராட்டத்தில், ஏற்பட்ட துரதிஷ்டவசமான நிலைமைகளே காரணம். அது ஒருபுறமிருக்க, அண்மைக் காலகட்டங்களில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்களை ஒட்டியும், நடந்து முடிந்த டில்லி பேச்சுவார்த்தை, இந்திய-இலங்கை ஒப்பந்தம், ஆயுதம் ஒப்படைப்பு விவகாரங்கள், புலிகளின் தந்திர நாடகங்கள் ஆகியவை தொடர்பாக நீங்கள் அறிய மிகவும் ஆவலாக இருப்பீர்கள் எனக் கருதுகிறோம். தோழர்களுக்கு அவற்றை அறிவிக்க வேண்டியது ஸ்தாபனததின் கடமையாகும். ஏற்படப்போகும் புதிய சூழ்நிலைகள் பற்றியும், நாம் எதிர்நோக்கப் போகின்ற நெருக்கடிகள் பற்றியும் எமக்குத் தெளிவான முன்கூட்டிய பார்வை ஒன்று அவசியமானது. அவை தொடர்பாக நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதையும், நாம் முன்கூட்டியே திட்டமிட்டுச் செயல்படுவதற்கு இப்பொழுதே தயாராக வேண்டியுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்பாகவே இவ்வெளியீடு வெளியிடப் படுகின்றது.

★ ★ ★

---

EPRLF வெளியீடு

## 1. இலங்கை-இந்திய ஒப்பந்தம்

வடக்கு கிழக்கு இணைந்த ஒரு மாகாணசபை என்னும் அமைப்பே 'இலங்கை-இந்திய' ஒப்பத்தத்தின் படியான அரசியற் தீர்வாகும். இந்த ஒப்பந்தம், **எமது ஆலோசனையை, ஒப்புதல்களை பெறுவதற்கு முன்னரே இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துடன் முடிவு செய்யப்பட்டுவிட்ட விடயமாகவே எமக்கு முன்னால் வைக்கப்பட்டது.** அந்தச் சூழ்நிலையிலும் இவ் ஒப்பந்தம் தொடர்பாக நாம் எமது கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் இந்திய அரசுப் பிரதிநிதிகளுக்குக் கூறியிருக்கின்றோம். இதைவிட எம்மால் வேறு எதையும் செய்யக் கூடியதாக இருக்கவில்லை. வேண்டுமென்றால் புலிகளைப் போல் ஒரு போலி நாடகத்தை சுயபிரச்சார நோக்கத்திற்காக சில நாட்களுக்கு ஆடிக்காட்டியிருக்கலாமே தவிர வேறு எதனையும் சாதித்திருக்க முடியாது. அவ்வாறான ஒரு போலி நாடகம் மேலும் புலிகளுக்கே பலத்தை ஊட்டியிருக்குமே தவிர எமது மக்களுக்கோ, எமது ஸ்தாபனத்திற்கோ எந்த நன்மையையும் அளித்திருக்காது.

எம் இனிய தோழர்களே!

**'இலங்கை-இந்திய' ஒப்பந்தம்**
**தொடர்பாக எமது சில அபிப்பிராயங்கள் :**

(i) இந்த ஒப்பந்தம் ஈழமக்களின் தேசிய ஒடுக்குமுறைப் பிரச்சினையை முற்றாகத் தீர்க்காது; ஒரு இடைக்கால அமைதியை? மட்டுமே உருவாக்கும். ஓர் இடைக்கால அமைதி எமது மக்களுக்கும், எமது போராட்டத்திற்கும், எமது ஸ்தாபனத்திற்கும் அவசியம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

(ii) 'இலங்கை-இந்திய' ஒப்பந்தம் எவ்வளவு தூரத்திற்கு உண்மையில் நடைமுறையில் அமுலாகும்; **அதில் எவ்வளவு தூரம் சிறீலங்கா அரசு நேர்மையாகவும், உண்மையாகவும் நடந்துகொள்ளும் என்பவை கேள்விக்குறிகளே.** இலங்கையில் அரசியல் பொருளாதார நெருக்கடிகள், சிங்கள பெருந்தேசிய இனவெறி, பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியல்கள் என்பவை இவ் ஒப்பந்தம் அமுலாக்குவதை தவிர்க்க

முடியாதபடி நெருக்கடிகளுக்குள்ளாக்கியே தீரும். **எனவே எமது மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் தொடர்ந்தும் இடம்பெறும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.**

(iii) இவ் ஒப்பந்தம் சிறீலங்கா அரசினால் முழுமையாக அமுலாக்கப்படாத போது எமது போராட்டத்தின் நியாயங்களையும் இந்த உலகம் விளங்கிக் கொள்ள வழி ஏற்படும். இதேவேளை எமது மக்கள் மத்தியிலுள்ள குட்டி முதலாளித்துவ வர்க்கங்கள், அதிகார வர்க்கங்கள், இனவாத இயக்கங்கள், குழுக்கள் போன்றவைகள் மக்கள் மத்தியில் நன்கு அம்பலப்படப் போகின்றன. அதுமட்டுமல்லாது அவை மீண்டும் தலைதூக்க முடியாதவாறு பலத்த சேதத்திற்கு அரசியல் ரீதியாக உள்ளாகும்.

(iv) இனவாத உணர்வின் அடிப்படையிலான தமிழீழக் கோஷமானது எவ்வளவு தூரம் பலவீனமானது, சந்தர்ப்பவாதமானது என்பதை மக்கள் இப்போது ஓரளவு புரிந்து கொள்ளுவார்கள். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மக்கள் மத்தியில் பரந்துபட்ட ஒரு புரட்சிகரக் கட்சியை கட்டி எழுப்புவதும், இனவாத உணர்வுகளை மீறிய வகையிலாக மக்களைச் சமுதாயப் புரட்சியை - சமுதாய முன்னேற்றத்தை நோக்கி முன் இழுத்துச் செல்லும் கடமைகளையும் நாம் மிகத் தீவிரமாக ஆற்றுவதற்கான வாய்ப்புக் கிடைக்கும். கொழும்பில் மத்திய ஆட்சியையும், வடக்கு கிழக்கில் மாகாண ஆட்சியையும் பார்க்கப் போகும் உழைக்கும் மக்கள் சிங்களவன் ஆண்டாலென்ன தமிழன் ஆண்டாலென்ன சமுதாயப் புரட்சி நடக்காதவரை தங்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காது என்பதைப் புரிந்து கொள்ளப் போகிறார்கள், அதே சமயம் தென்னிலங்கையிலும் ஒரு சமுதாயப்புரட்சி ஏற்படாதவரை இலங்கையில் நிரந்தரமானதும், நியாயமானதுமான சமாதானம் ஏற்படாது. **புலிகளின் தாகம் பதவி மோகம், அதிகாரமோகம்** என்பதை இன்னும் மக்கள் நன்கு உணர்வார்கள். புலிகளின் அமைப்பு,சட்டசபை அரசியலால் சீர்குலையும்; மீண்டும் வரக்கூடிய ஓர் ஆயுதப் போராட்டத்தில் புலிகள் தலையை நிமிர்த்த

முடியாது. ஆனால் இடைக்காலத்தில் குண்டர் களாக, கொலைகாரர்களாக ஒரு குழுவை மறைவாக வைத்துச் செயற்படுவார்கள். அப்படி அவர்கள் செயற்படும் பட்சத்தில் அதுவே அவர்களின் இறுதியு மாகும்.

## 2. புலிகள், ஈரோஸின் பொய்ப் பிரச் சாரம் - உண்மையில் நடந்ததென்ன?

(i) நாங்கள் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டதன் மூலம் துரோகம் செய்துவிட்டதாகவும், தமிழினத் துரோகி கள் என்றும் பிரச்சாரம் நடக்கின்றது. துரோகிகள் யார்? தியாகிகள் யார்? என்று தீர்மானிக்கும் அதி காரத்தைப் புலிகளுக்கு யாரும் வழங்கவில்லை என்பது ஒருபுறமிருக்க, LTTE, EROS **ஆகியோர் கடந்த ஆண்டு நவம்பர் மாதமே தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டார்கள்.** வடக்கு கிழக்கு மாகாணம் ஒரு மாநிலமாக அங்கீகரிக்கப்பட்டால், சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை மூலமான ஓர் ஒப்பந்தத் திற்குத் தாங்கள் தயார் என எழுத்து மூலமாக இந்திய அரசாங்கத்திற்கு வழங்கி, இந்திய அரசிடம் அங்கீகாரம் பெறுவதற்கு கடந்த நவம்பர் மாதம் 3ம் திகதி செயற்பட்டனர். அவர்களின் எழுத்து மூல மான ஒப்புதலின் அடிப்படையிலேயே 1986 நவம்பர் மாதம் நடைபெற்ற பெங்களூர் சார்க் மாநாட்டின் போது பிரபாகரன் பெங்களூரிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அப்போது புலிகள், இந்திய அரசாங்கம் தங்களை மட்டுமே அங்கீகரித்ததன் அடையாளம் அது என்று தம்பட்டம் அடித்துக் கொண்டார்கள். **அந்த நேரத்தில் ஈழமக்களின் சுயநிர்ணய உரிமையை முழுமையாகத் திருப்திப்படுத் தும் ஓர் ஒப்பந்தத்தை சிறீலங்கா அரசு முன்வைக்காத வரை சிறீலங்கா அரசுடன் பேச்சு வார்த்தைக்கோ. ஒப்பந்தத்திற்கோ நாங்கள் தயாரில்லை என** EPRLF, PLOT, TELO **ஆகிய மூன்றும் உறுதியான நிலைப் பாட்டைக் கொண்டிருந்தன.** இதனால் இராணுவ ரீதியில் வலிமை பொருந்திய புலிகள் இயக்கம் பேச்சு வார்த்தை ஒப்பந்தத்திற்குத் தயாராக இருந்ததை, இந்திய அரசாங்கம் தமது முயற்சிகளுக்குச் சாதக மாக எடுத்துக்கொண்டது. இதில் EROS, ENLF

உடன் சேர்ந்து எமது நிலைப்பாட்டோடு கையெழுத்திட்டு எம்மோடு சேர்ந்து ஓர் அறிக்கையை இந்திய அரசாங்கத்திற்குக் கொடுத்துவிட்டு, **அதே வேளை தனியாக இந்த மாகாண சபை ஒப்பந்தத்தைத் தாங்களும் ஏற்கத் தயார் என ஓர்** அறிக்கையை LTTE யின் **அறிக்கைக்குச் சாதகமாக இந்திய அரசிற்குக் கொடுத்தது.** மீனுக்குத் தலையையும், பாம்புக்கு வாலையையும் காட்டும் விலாங்குத்தனத்தை EROS கடந்த ஓர் ஆண்டுகாலமாகக் கடைப்பிடித்து வந்திருக்கிறது என்பதை இங்கு விபரிக்கத் தேவை இல்லையென்றே கருதுகிறோம், புலியின் வாலாகத் தொழிற்பட்டு வரும் EROS ஐப் பற்றி இங்கு தனியாகக் குறிப்பிட்டுக் கொண்டிருக்காமல் புலிகள் என்பதில் EROS ம் உள்ளடக்கம் என நீங்கள் எடுத்துக் கொள்ளவும். அந்த வகையில் நாங்கள் 1987ம் ஆண்டு ஜுலை மாதம் 27ம் திகதி தான் மாகாணசபை ஒப்பந்தத்தை இந்திய-இலங்கை உடன்பாடாக ஏற்றுக் கொண்டோம். ஆனால் புலிகளும் அதன் வாலாகிய EROS உம் 1986ம் ஆண்டு நவம்பர் மாதம் 3ம் திகதியே இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்பதை மக்களுக்கும், எமது தோழர்களுக்கும், அனைத்துப் போராளிகளுக்கும் நினைவுபடுத்த வேண்டியவர்களாகவும், கூறவேண்டியவர்களாகவும் உள்ளோம்.

(ii) ஈழப்போராட்டத்தில் துரோகம் எப்போது ஆரம்பித்தது, எப்படி, ஆரம்பித்தது என்பதை விளக்குவது எமது கடமையாகும் ஈழப்போராட்டத்தின் இறந்த சுமார் 3000 போராளிகளில் கிட்டத்தட்ட 1500 போராளிகள் **சகோதரப் படுகொலைகளாலும், சயனைட்டுத் தற்கொலைகளாலும்** கொல்லப்பட்டுள்ளார்கள். இதில் சுமார் 950 போராளிகள் புலிகளால் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்' 80%க்கு மேற்பட்ட ஈழப்போராளிகள் போராட்டத்தில் பங்கு பற்ற முடியாமல் செய்யப்பட்டார்கள்; பாதிக்கு மேற்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்த முடியாமற் செய்தார்கள்; இப்படுகொலைகளாலும், மக்கள் மீதான துப்பாக்கி அதிகாரங்களாலும் மக்கள் மத்தியில் விரக்தியையும், வெறுப்பையும் வளர்த்தார்கள்;

சிறீலங்கா அரசிற்குச் சார்பாக செயற்பட்டு வந்த ஏகாதிபத்திய சக்திகள் ஊடுருவுவதற்கான எல்லா வாய்ப்புகளையும் ஏற்படுத்தி கொடுத்து வந்தார்கள். எல்லாவற்றையும் தொகுத்து கணக்கிட்டுப் பார்த்தால் துரோகத்தின் ஏகச்சக்கரவர்த்தி யார் என்பதை ஈழமக்கள் தெளிவாகவே புரிந்து கொள்வார்கள்.

(iii) தாங்கள் மட்டுமே கடந்த அண்மைக் காலங்களில் சிறீலங்கா இராணுவத்திற்கெதிராகப் போராடியதாகவும், தங்களில் சுமார் 600 பேர் தமிழீழத்திற்காகச் செத்திருக்கிறார்கள், ஆகவே தியாகத்தின் மொத்த உருவம் தாங்கள் மட்டுமே என்றும் கூறி வருகின்றார்கள். இதில் முதலாவதாக, தாங்கள் மட்டும் தனியாக நின்று போராட முடியும் என்று முன்னர் வீறாப்புக்கூறி, ஏனைய போராட்ட இயக்கங்கள் மீது யுத்தங்களைத்தொடுத்து, அந்த இயக்கங்களைச் சீர்குலைத்தவர்கள், பின்னர் கூறுகின்றார்கள்; 'மற்ற இயக்கங்கள் போராட வரவில்லை நாங்கள் மட்டுமே போராடுகிறோம்' என்பதாக, **சகோதர இயக்கங்கள் மீது LTTE தொடுத்த யுத்தங்களின் விளைவே யாழ்ப்பாண மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் அனைத்தும் அரசபடைகளின் முழுக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டதாகும். யாழ் மாவட்டத்திலும் வடமராட்சிப் பகுதிகளின் கட்டுப்பாட்டை அரச படைகளிலும் இழக்கவேண்டி ஏற்பட்டது.** அனுபவங்களையும், புத்தி கூர்மையையும் கொண்டிருக்கும் எமது மக்களை மகா முட்டாள்கள் எனப் புலிகள் நினைத்துவிடுவது வேடிக்கைக்கும், நகைப்பிற்கும் உரிய விடயமாகும்.

அடுத்ததாக, 600 பேர் தங்களுடைய இயக்கத்தைச்சேர்ந்தவர்கள் களத்தில் மாண்டதாக கூறிவருகின்றார்கள். அதில் 250 பேர் புலிகளின் **சயனைட் கலாச்சாரத்தினால்** வீணாகத் தற்கொலைக்கு மாண்டவர்கள் என்பதை மறைத்துவிடப் பார்க்கின்றார்கள். அதேவேளை TELO அமைப்பைச் சேர்ந்த 350 இற்கு மேற்பட்டவர்களை புலிகள் படுகொலை செய்ததையும், எமது அமைப்பைசேர்ந்த நூற்றுக்கு மேற்பட்டோரை அவர்கள் படுகொலை செய்ததையும், இப்படியாகப் **புலிகளால் கொல்லப்பட்ட ஏனைய**

**இயக்கங்களின் போராளிகளின் புகைப்படங்கள்700க்கு மேற்பட்டவை** என்பதையும் ஈழமக்களுக்கும், ஈழப் போராளிகளுக்கும் சுட்டிக்காட்ட வேண்டிய கடமை எமக்குண்டு. சிறீலங்கா இராணுவத்திற்கெதிராகப் போராடி இறந்த புலி உறுப்பினர்களைக் கேலி செய்வதற்காகவோ, கேவலப்படுத்துவதற்காகவோ நாம் இதைச் சொல்லவில்லை என்பதையும், தியாகத்தின் உண்மையான நிலைமை என்ன என்பதை மக்களுக்கு விளக்குவது எமது கடமை என்பதாலுமே இதைச் சொல்ல வேண்டியது எமக்கு அவசியமாயிற்று.

(iv) தாங்களே உண்மையான தேசபக்தர்கள் எனப் புலிகள் பிரச்சாரம் செய்வது பற்றியும் நாம் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. சக இயக்கப் போராளிகளைப் படுகொலை செய்தமை தேசபக்தியல்ல; தேசத்துரோகம். அதிதீவிரவாதிகள் போலத் தம்மைக் காட்டிவிட்டு, தமது சுயநல நோக்கத்திற்கும், தேவைகளுக்கும், அதிகார வேறித்தனத்திற்கும் மக்களின் நலன்களை இவர்கள் எங்கெங்கு யார்யாரிடம் அடகு வைத்திருக்கிறார்கள் என்பதை நாம் பட்டியல் போட்டு மக்களுக்கு அடையாளம் காட்ட வேண்டியுள்ளது. உரிய நேரத்தில் நாம் அவற்றை வெளிக்கொணர்வோம். சர்வதேச பிற்போக்கு சக்திகளுக்கும்,சிறீலங்கா அரசிற்கும் சார்பாக செயற்பட்டு வந்த தமிழகத்தின் ஒரு பொலிஸ் அதிகாரியின் (இந்தியாவின் பல்வேறு மட்டங்களிலும் இவர் ஒரு C.I.A. என நம்பப்படுகின்றது) கைப்பொம்மைகளாகச்செயற்பட்டு வந்த புலிகள், எம்மைப்பார்த்து இந்திய அரசாங்கத்திற்கு ஆதரவாகச் செயற்பட்டு வந்தோம் என்று பிரச்சாரம் செய்து வருவதைக் கண்டு நம் கைகொட்டிச்சிரிப்பதை தவிர வேறொன்றும் செய்வதற்கில்லை. இந்திய அரசிற்கு எதிராக நாங்கள் கண்மூடித்தனமான பிரச்சாரங்கள் செய்தவர்களும் அல்ல. இந்திய அரசாங்கத்துடன் எமக்குள்ள நட்பு தொடர்பாக திட்டவட்டமான கொள்கை உண்டு, கோட்பாடு உண்டு, நேர்மையான நிலைப்பாடு உண்டு. அன்று தொடக்கம் இன்று வரைக்கும் நாம் சந்தர்ப்பவாத பிரச்சாரங்களையோ, நிலைப்பாடுகளையோ கடைப்பிடிக்கவில்லை, **கடைப்பிடிக்கவும் மாட்டோம்.**

*இந்திய அரசாங்கம் சர்வதேச அரசியல் நிலைப் பாட்டில் ஏகாதிபத்திய எதிர்ப்பு உள்ளடக்கத்தைக் கொண் டிருக்கின்றவரை நாங்களும் இந்திய அரசாங்கத்தின் நண் பர்களாக இருப்போம் என்பதை இந்திய அரசுப்பிரதி நிதிகளுக்கும், மக்களுக்கும் ஆரம்பத்திலிருந்து உறுதி யாக எடுத்துக்கூறி வந்திருக்கிறோம். அந்த அடிப்படை யிலேயே நாம் இந்திய அரசாங்கத்துடன் மூலோபாய உறவுகளை கொண்டிருந்து வந்திருக்கிறோம்.*

இவ் ஒப்பந்தம் (இலங்கை - இந்தியா) தொடர்பாக நடந்து கொண்ட விதம், புலிகள் இலங்கை - இந்திய உடன்பாடு தொடர்பாக தங்களுடைய நிலைப்பாட் டைத் தெரிவிக்கும் விடயத்தில், ஆயுதங்களை கையளிப் பதில் தங்களுடைய பாதுகாப்பைப்பற்றி அதிகளவு அக் கறை எடுத்துக்கொண்டார்கள். மக்களின் நலன்களுக் காகவோ எதிர்காலத்தில் ஈழமக்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் பற்றியோ ஒப்பந்தத்தில் உள்ள அடிப் படைக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியோ இந்திய அரசாங்கத்துடன் புலிகள் பிரச்சினைப்படவில்லை. மாறாக தங்களின் சொந்த நலன்களை முன்வைத்தே பிரச்சினை எழுப்பிக்கொண்டார்கள். அவர்கள் ஒப்பந்தம் தொடர்பாக இந்திய அரசாங்கத்துடன் பிரச்சினைப் பட்டுக்கொண்ட அனைத்தும் ஈழப்போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்காக அல்ல, மாறாக, தங்கள் சொந்தப்பாதுகாப்புகளுக்கான ஏற்பாடுகளை இந்திய அரசாங்கத்தினூடாகத் தேடிக்கொள்வதும், இடைக்கால நிர்வாக அதிகாரத்தையும், முதலமைச்சர் பதவியையும் பெற்றுக்கொள்வதற்காகவுமே ஆகும். எமக்கெதிராகப் புலிகள் செய்துவரும் பிரச்சாரங்கள் தம்மை நியாயப் படுத்துவதற்காகவும், எதிர்வரும் மாகாணசபைத் தேர் தலில் வாக்கும் பெறுவதற்கும், மக்கள் மத்தியில் தாம் அந்நியப்பட்டுவிடுவார்கள் என்ற பயமுமே காரண மாகும். அவர்களின் பிரச்சாரங்களில் எவ்வித நேர்மை யும் உண்மையும் இல்லை என்பதை தெளிவுபடுத்துவது எமது கடமையாகும். மக்களும் இதை தற்போது உணர்ந்து வருகின்றனர் என்பது மக்களின் அண்மைக் கால நடவடிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன.

பாசமிகு தோழர்களே!

## 3. நாம் ஏன் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டோம்?

1986ம் ஆண்டு ஏப்ரல் மாதம் புலிகள் TELO மீது நடத்திய கோரயுத்தத்தைத் தொடர்ந்து ஈழப்போராட்டம் வீழ்ச்சி நிலையை அடையத் தொடங்கிவிட்டது. 1985ம் ஆண்டு திம்புப்பேச்சுவார்த்தை வேளையில் நிலவிய ஒற்றுமையும் யுத்த நிறுத்த ஒப்பந்தமுமே யாழ்ப்பாணக் குடாநாட்டில் இராணுவத்தினரை முகாம்களுக்குள் அடைத்துவைக்க வழிவகுத்தது. ஏனைய மாவட்டங்களில் இராணுவ முன்னேற்றங்களைப் படிப்படியாகக் குறைத்துவரத் துணை புரிந்தது. ஆனால் TELO மீது புலிகள் யுத்தம் நடத்தியதைத் தொடர்ந்து சிறீலங்கா அரச படைகள் 'உசார்நிலையை அடைந்தன. எமது மக்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். பெருந்தொகையான போராளிகள் போராட்டத்தை விட்டு ஒதுங்கினார்கள்.

ஏனைய ஈழவிடுதலை இயக்கங்கள், ஏனைய வெகுஜன ஸ்தாபனங்கள், தொழிற்சங்கங்கள், ஜனநாயக அமைப்புக்கள், முற்போக்குச் சக்திகள் மீதான புலிகளின் யுத்த மேகம் ஈழமக்களை அச்சுறுத்தலுக்குள்ளாக்கி கொண்டிருந்தது.

1686 டிசம்பர் 13ம் திகதி EPRLF மீது புலிகள் தாக்குதலை ஆரம்பித்தனர். தொடர்ந்து சுமார் $1\frac{1}{2}$ ஆண்டு காலமாக முகாம்களுக்குள் அடைந்து கிடந்த அரசபடைகள் யாழ் குடாநாட்டின் வீதிகளில் வெற்றி உலாவரத் தொடங்கினார்கள். அரசுபடைகளை முன்னேறவிடாமல் தடுத்துவைப்பதில் முன்னணி வகித்த எமது மோட்டார்த் தாக்குதல்கள் டிசம்பர் 13இற்குப் பின்னர் செயற்பட முடியாமற்போயின. இந்த வேளையிலும் கைது செய்யப்பட்ட எமது தோழர்களை துப்பாக்கி முனையில் வைத்துக்கொண்டு, எம்மிடமிருந்து கைப்பற்றிய சில மோட்டார்களையும் புலிகள் பயன்படுத்தினார்கள் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. எம்மீது புலிகள் நடத்திய யுத்தத்திற்குப் பின்னர் ஈழமக்களுக்கு ஜனநாயகம் சிறிதுமில்லாமல் போனது. சிறீலங்கா இராணுவத்தை

விடக் கொடூரமான ஒடுக்குமுறைகளை அடக்குமுறைகளை எமது மக்கள் புலிகளினரால் அனுபவிக்க வேண்டி ஏற்பட்டது. TELO, PLOT, EPRLF மீது புலிகள் நடத்திய யுத்தத்திற்குப்பின்பு இடம்பெற்ற ஒவ்வொரு ஈழப்பிரஜையின் சாவும் அரசியல் இலக்கற்றதாகவே இருந்தது. வீழ்ச்சி நிலையை எய்திக் கொண்டிருந்த ஈழப்போராட்டத்தில் ஒவ்வொரு சாவையும் வீணானதாகவே நாம் கருதுகின்றோம். ஏனைய இயக்கங்கள் சுதந்திரமாக நின்று போராட முடியாத நிலையில் அரசபடைகளையும், புலிப்படைகளையும் ஒரே நேரத்தில் முகம் கொடுப்பதென்பது அழிவைத்தவிர வேறு எதையும் சாதிக்காது என நாம் கருதினோம் 86 நவமபர் வடக்கு கிழக்கு மாநில மாகாண சபை தீர்வை முன்வைத்த புலிகளின் தமிழீழக் கோஷம் என்பது, பதவி, அதிகாரம், பணம் ஆகியவற்றிற்கான ஏமாற்றுக்கோஷம் என்றே நாம் முடிவு செய்தோம். கடந்த மே மாதத்தைத் தொடர்ந்து அரச படைகள் நடத்திய தீவிரப்படுத்தப்பட்ட மும்முனைத் தாக்குதலும். புலித்தலைமையின் களப்பலியினால் ஏற்பட்ட விரக்தியினாலும் புலிகள் பின்வாங்கி ஓடினார்கள்; நூற்றுக்கணக்கான புலிகள் தமிழ்நாட்டில் தஞ்சமடைந்தார்கள். கடைசியாக உணவுப்பொட்டலங்களுடன் வந்த இந்திய அரசின் 'மிராஜ்' விமானங்களே அரச படைகளின் முன்னேற்றத்தை மேலும் முன்னேறா வண்ணம் தடுத்து நிறுத்தின. இவ்வாறான சூழ்நிலையில் ஓர் இடைக்கால அமைதியை ஏற்படுத்தி, நடந்து கொண்டிருந்த-பிழையான திசை வழி சென்று கொண்டிருந்த ஈழப்போராட்டத்தை நிறுத்தி, நின்று, நிதானமாக சரியான புரட்சிகரப் பாதையில் சமூக அமைப்பை மாற்றுவதற்கான எதிர்காலப் போராட்டத்தை முன்னெடுப்பதற்காகவே இவ் ஒப்பந்தத்தை நாம் ஏற்றுக் கொண்டோம். இதில் பதவிகளுக்காகவோ, புகழுக்காகவோ, அதிகாரத்துக்காகவோ நாம் இந்த முடிவுகளுக்கு வரவில்லை. அப்படி முடிவுக்கு வரவேண்டிய அவசிய நிலைமை எமக்கு இல்லை என்பதை மக்களால் புரிந்து கொள்ள முடியும். பதவி, அதிகாரம், பணம், புகழ்' வெறி யாருக்கு உண்டு என்பதை மக்கள் கடந்த சில ஆண்டுகளாகத் தெரிந்தே வந்திருக்கிறார்கள். நாம் எமது மண்ணை நேசிக்கிறோம் என்பது வெறும் மண்

ணுக்காக இல்லை; அதில் வாழும் மக்களுக்காகவே என்பதில் தெளிவும், உறுதியும் அவசியமாகும். சிறீலங்கா அரசுக்கெதிரான போராட்டத்தில் ஒவ்வொரு ஈழப் பிரஜையின் சாவும் அர்த்தமுடையதாகவும், அரசியல் இலக்கு உடையதாகவும் இருத்தல் வேண்டும் என்பதில் உறுதியாக இருத்தல் வேண்டும்.

அன்பான தோழர்களே !

**4. இந்த ஒப்பந்தத்தை நாம் ஏற்காமல், இதற்கு எதிராகச் செயற்பட்டிருப்பின் விளைவுகள் என்ன?**

இதில் இரண்டு விடயங்கள் உள்ளன :

1. ஈழப்போராட்ட அமைப்புக்கள் இவ் ஒப்பந்தத்தை ஏற்காமல் எதிர்த்தல்.
2. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாங்கள் இவ் ஒப்பந்தத்தை ஏற்காமல் எதிர்த்தல்.

இவ்விரண்டில் முதலாவதை எடுத்துக் கொள்வோம். அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் :

(அ) சிறீலங்கா அரசாங்கம் இதுவரைக்கும் எதிர் பார்த்து வந்ததைப்போல், இந்திய அரசாங்கத்திற்கும் எமக்கும் இடையே ஒரு பிளவை ஏற்படுத்தும் நிலைமையை உருவாக்கியிருக்கும். இது எமது போராட்டத்தைப் பிற்போக்குத்தனமாக ஆக்குவதாக மட்டுமல்லாமல் இந்திய அரசாங்கத்தை எமக்கு எதிராகவும் நிறுத்தியிருக்கும். எம்மைப் பொறுத்தவரையில் எமது மக்களுக்கு அது பாதகமான நிலைமைகளையே ஏற்படுத்தியிருக்கும்.

(ஆ) கடந்த காலத்தில் எமது அரசியல்வாதிகள் எமது மக்களுக்கான கோரிக்கைகளை முன் வைத்து வந்த முறைகளின் படியும், ஆயுதந்தாங்கிய போராட்டத்தில் நாம் ஏன் இறங்கினோம், நாம் ஏன் ஈழம் கோரி போராடுகின்றோம் என்பதைப்பற்றி இந்த உலகம் விளங்கிக் கொண்ட விதத்தின்படியும், இந்த ஒப்பந்தத்தை நாம் நிராகரித்திருப்பின், உலகச் சக்திகளின் முன்னால் நாம்

ஒரு நியாயமற்ற, சமாதானத்தை விரும்பாத, கண்மூடித் தனமான ஆயுத வெறியர்களாகவே காட்சியளிப்போம். இதுவரை எமக்கு ஆதரவாக இருந்துவந்த உலக அபிப்பிராயம் எமக்கெதிராகத் திரும்பி இருக்கும்.

இந்தியாவின் நட்பில் இருந்தும், சர்வதேச அபிப்பிராயத்திலிருந்தும் தனிமைப்பட்டு நின்று நாம் ஒரு போராட்டத்தை நடத்த முடியாது. அது மட்டுமல்லாது ஈழப் போராட்டத்தில் ஏற்பட்ட குறிப்பாக புலிகளால் ஏற்படுத்தப்பட்ட துரதிஷ்டவசமான நிலமைகளின் காரணமாக எமது மக்கள் வெறுப்பும், விரக்தியும் கொண்டிருக்கின்ற இன்றைய நிலையில், அவர்கள் எவ்வாறாயினும் ஓர் அமைதியையே விரும்புகின்றனர் என்பதே உண்மையாகும். அந்த நிலையில் ஒப்பந்தத்தை நாம் நிராகரிக்கின்ற போது பெரும்பான்மையான மக்கள் எம்மீது வெறுப்புக் கொள்வார்களே தவிர விருப்புக் கொள்ளமாட்டார்கள். எனவேதான் இந்த ஒப்பந்தத்தை நாம் ஏற்றுக்கொண்டோம். **ஒரு சில மோசடி சக்திகள் யுத்தகால நிலையைப் பயன்படுத்தி; கொள்ளை லாபம் அடிப்போர், கொலைகார, கொள்ளைக்கார சக்திகள், ஆயுதந்தாங்கித் திரிவதிலேயே மோகமாகிப் போனவர்கள் மட்டுமே இவ் ஒப்பந்தத்தை எதிர்ப்பர் இவ்வாறான சக்திகள் ஒரு பகுதி மக்கள் மத்தியில் நிலவும் இன உணர்ச்சியையும், அறியாமையையும் பயன்படுத்துவர். இது தொடர்பாக நாம் விழிப்பாக இருத்தல் வேண்டும்.**

இரண்டாவது பற்றி :-

(ii) **எமது ஸ்தாபனம் மட்டும் இவ் ஒப்பந்தத்தை ஏற்கா விட்டால் நிலமை என்ன?**

(அ) புலிகள் ஏற்கெனவே கடந்த நவம்பர் மாதத்தில் இவ் ஒப்பந்தத்தை ஏற்றிருக்கின்ற நிலைமையில் நாம் நிராகரிப்பது எம்மை எமது நட்புச்சக்திகள் அனைத்திடமிருந்து தனிமைப்படுத்தும்.

(ஆ) எமது மககள் எம்மை வெறுப்பர். எமது மக்களில் இருந்து தனிமைப்பட வேண்டி ஏற்படும்

(இ) நாமே புலிகளை மேலும் பலப்படுத்தும் வேலைகளை செய்பவர்களாக ஆகியிருப்போம். புலிகள் முற்போக்கு வாதிகள் போலவும், நாம் பிற்போக்கு

வாதிகள் போலவும் உலகம் பார்க்கத் தொடங்கி யிருக்கும். ஏற்கெனவே பல நெருக்கடிகளின் மத்தி யில் அகப்பட்டிருக்கும் எம் ஸ்தாபனம் மேலும் தேவையில்லாத நெருக்கடிகளைத் தன தலையிலேயே அள்ளிப்போடுவதாக அமையும். இவ் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டதன் மூலம் எமது சமுதாயத்தி புரட்சிக்கும், எமது ஸ்தாபனத்தில் எதிர்காலத்தின் கும் வேண்டிய நன்மைகளை ஆற்றியிருக்கிறோம் என்பதை இனிவரும் ஒரு குறுகிய காலகட்டத்தில் யாவரும் அறிய முடியும்.

நேசமிகு தோழர்களே!

## 5, நாம் எதிர் நோக்க இருக்கும் புதிய சூழ்நிலைகள் பற்றி:-

1. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மக்கள் மத்தியில் போராட்டத்தின்மீதான நம்பிக்கையின்மையும், வெறுப்பும் நிலவும்,

2. மக்கள் மத்தியில் இருந்து எழும் போராட்டங்களை முறியடிப்பதில் சிறீலங்கா அரசுமட்டுமல்லாது தமிழ் அரசியல் வாதிகளின் (புலிகளின் உட்பட) படை களும் அரசுக்குத் துணையாக நிற்கும்.

3, மக்கள் மத்தியில் வெவ்வேறுபட்ட இயக்கங்களுக்கு ஆதரவளித்தல் என்பது பிளவுகளாகவும், போட்டி களாகவும் தலைதூக்கும்.

4. காட்டிக்கொடுத்தல் என்பது அதிக அளவிலும், நம்பிக்கையுடனும், துணிவோடும் செயல்படும்.

5. மக்கள் மத்தியில் தனிப்பட்ட நலன்கள், விருப்பங்கள் மீதான செயற்பாடுகளே முனைப்படைந்து நிற்கும்.

6 எதிர்ப்புரட்சிகர, பிற்போக்கு நிறுவனங்கள் ஸ்தா பனங்கள் மக்களின் போராட்ட உணர்வுகளை மழுங்கடிப்பதில் தீவிரமாக செயற்படும்.

7 இதுவரை ஆயுதம் தாங்கிய சக்திகளில் சில சமூக விரோதிகளாகவும், ஆதிக்க, எதிர்ப்புரட்சிகர, பிற் போக்கு சக்திகளின் குண்டர்களாகவும் மாறிச் செயற்படும்.

8. பிற்போக்கு கலாச்சாரங்கள் தலைதூக்கும்.

9 அன்னிய மூலதனங்களின் ஊடுருவல் மிகவும் விரிவாகவும், ஆழமாகவும் செயற்படும்.

10. மக்கள் மத்தியில் நுகர்வு மோகம் தலைதூக்கி நிற்கும்.

11. போராட்ட காலகட்டத்தில் மறைந்துகிடந்த சாதிப் பிளவுகள், பிரதேச வேறுபாடுகள், மதப்பூசல்கள் போன்றவை மேலெழ முயற்சிக்கும்.

12. பாராளுமன்ற, மகாண, மாநகர, நகர, கிராமசபைகளின் தேர்தல் மாயைகளில் மக்களை மயக்கும் முயற்சிகள் தலைவிரித்தாடும்.

13. பணபலம், அதிகாரபலம், ஆளும் வர்க்க பலம் கொண்ட பிற்போக்கு, எதிர்ப்புரட்சிகர சக்திகளின் மத்தியில் நிதிப்பற்றாக்குறை, மற்றும் பொருட்பற்றாக்குறை, மற்றும் ஏனைய வசதி வாய்ப்புகள் அற்ற நிலைமை கொண்ட நாம் மிகவும் சிரமத்திற்கும், துன்பத்திற்கும் உட்பட்டு நின்று செயற்படவேண்டி இருக்கும்.

இதே வேளையில் மறு பக்கமாக:-

1. பொருளாதார நெருக்கடிகள் மேலும் அதிகரிப்பதன் மூலம் வர்க்க முரண்பாடுகள் முன்னணிக்கு வர முயற்சிக்கும்.

2. இனவாத சக்திகளின் சந்தர்ப்பவாத போக்குகளையும், கொள்கைகளை கைவிடும் ஒடிகாலித்தனங்களையும் மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தும் வாய்ப்பு ஏற்படும்.

3. சமுதாயப் புரட்சியின் தேவைகளை மக்கள் உணரும் நிலை படிப்படியாக ஏற்படும்.

4. இதுவரையும் நடைபெற்ற போராட்டத்தில் பயிற்சியும், அனுபவமும் பெற்ற பல்லாயிரக்கணக்கானவர்களில் பலர் எதிர்காலப் புரட்சியின் வீரர்களாக மாறுவர்.

5. மகாண சபை இனவாதத்திற்கும், உணர்ச்னயசிக்கும் தமிழ்நாட்டில் உள்ள சட்டசபை போல் தீனி

போடலாம். ஆனால் வேலை இல்லாமைக்கும், நிலம் இல்லாமைக்கும், வறுமைக்கும், சாதி ஒடுக்கு முறைக்கும், பிரதேச ஏற்றத் தாழ்வுக்கும் தீர்வு கண்டு விடாது. எனவே மக்கள் மத்தியில அடிப் படைத் தேவைகளிற்கான கோரிக்கைகள் மேலெழப் போகின்றன.

6. மக்கள் மத்தியில் பரந்துபட்ட மக்கள் அமைப்புகள், தொழிற்சங்கங்களை கட்டுவதற்கும், முஸ்லீம் மக்கள் மத்தியிலும், மலையக மக்கள் மத்தியிலும் வேலை களைச் செய்வதற்கும், மக்களை புரட்சியை நோக்கி அணி திரட்டுவதற்கும், முன்தள்ளுவதற்குமான, மக்கள் இயக்கங்களை முன்னெடுப்பதற்கும் சட்ட பூர்வமாகவே குறிப்பிடத்தக்க வாய்ப்புகள் ஏற்படும்.
7. சிங்கள மக்கள் மத்தியில் உள்ள சோசலிச, ஜனநாயக, முற்போக்கு, புரட்சிகர சக்தியோடு கலந்துரை யாடவும், கருத்துக்களை பகிர்ந்து கொள்ளவும்; பரந்துபட்ட போராட்டத்திற்கான முன் தயாரிப்பு களை மேற்கொள்ளுவதற்கான வாய்ப்புகளும், நிர்பந்தங்களும் ஏற்படும்.

இங்கு முன்னர் குறிப்பிடப்பட்ட பாதகமான அம்சங்களை நாம் உடனடியாக எதிர்நோக்க வேண்டி ஏற்படினும், பின்னர் குறிப்பிட்டுள்ள சாதக மான வாய்ப்புகளை கருத்தில் கொண்டு நாம் தன்னம்பிக்கையோடும், துணிவோடும், விடாமுயற்சி யோடும் எமது புரட்சிகர கடமைகளை ஆற்று வோமாக.

அனைத்து ஜனநாயக, புரட்சிகர,
முற்போக்கு சக்திகளும் ஐக்கியப்பட்டு
உறுதியுடன் இறுதிவெற்றிவரை போராடுவோம்!

''எமது அனைத்து உழைப்பும் மக்களின்
விடுதலைக்காகவே''

Eelam People s Revolutionary Liberation Front